## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுலை மாத சாதாரணக்கூட்டம் 07.2018–ம் தேதி ஆண்டு கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

திரு.க.சரவணகுமார்
தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான அசையா சொத்துகளுக்கு வாடகை தொகையிலிருந்து மத்திய கலால் வரித்துறைக்கு செலுத்த வேண்டியுள்ள சேவைவரி நிலுவைத் தொகை ரூ.16,01,893/– மற்றும் அதற்கான வட்டி தொகையினை கடிதம் கிடைக்கப்பெற்ற 3 நாட்களுக்குள் செலுத்த தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்நகராட்சி கணக்கு வைத்து இருக்கும் வங்கியில் சேவை வரிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் பிடித்தம் செய்ய மத்திய சரக்கு மற்றும் சேவை வரி உதவி ஆணையர் மூலம் வங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே மேற்படி உத்தரவை எதிர்த்து இந்நகராட்சி சார்பாக தொடரப்பட்ட வழக்கு எண். W.M.P.No.3904/18 –க்கு ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.25000/–ஐ நகராட்சி நிர்வாக நலன் கருதி நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூல பாண்டியன் அவர்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிய விவரம் மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.அ1/2524/2013

**தீர்மானம் எண்.1864 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் ரசீது மற்றும் காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் ரசீது ஆகியவற்றிற்கு தேவையான ரசீது அச்சடிப்பதற்கு நகராட்சி நிர்வாகம் நலம் கருதி உள்ளூர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு விலைப்பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பெயர் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தாசன் அச்சகம் | பஸ் நுழைவு கட்டணம் 1 புக் ( 1 முதல் 400 வரை)<br>கட்டணம் கழிப்பிடம் 1 புக் (1 முதல் 500 வரை) | 225/–<br>250/– |
| 2 | கிறேஸ் அச்சகம் | பஸ் நுழைவு கட்டணம் 1 புக் ( 1 முதல் 400 வரை)<br>கட்டணம் கழிப்பிடம் 1 புக் (1 முதல் 500 வரை) | 250/–<br>280/– |

மேற்காணும் இரண்டு விலைப்பட்டியலில் தாசன் அச்சகம் விலை குறைவாக இருப்பதால் மேற்படி அச்சகத்திற்கு ரசீது அச்சடிப்பதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/11062/2015

**தீர்மானம் எண்.1865 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி தொழில் வரி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில் வரி 25 சதவீதம் வரி உயர்வு செய்வது தொடர்பாக மாலை முரசு நாளிதழில் 15.06.2018–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.8190/– வழஙகுவதற்கு மன்றம் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/5423/2012

**தீர்மானம் எண்.1866 அஙகீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.1,2,3,4,9 மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிகவளாக கடை எண்கள். 8,9 ஆகிய கடை வாடகைதாரர்கள் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மறு ஏலம் விடுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டதில் இந்நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு.P.ஆதி மூல பாண்டியன் அவர்கள் மூலம் வழக்கு எண்.2369 முதல் 2375/2018–ன் படி நகராட்சி சார்பாக ஆஜரான வகையில் ரூ.52500 (7500 x 7) –ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கும், மேலும் கவியரசு கண்ணதாசன் வணிகவளாக கடை எண்கள் 1,2 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 18,19 ஆகிய கடைகளுக்கு மறு ஏலம் விடுவதை எதிர்த்து இரணியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.R.அகஸ்டின் அவர்கள் மூலம் வழக்கு எண்.10/2018, 11/2018–ன் படி, நகராட்சி சார்பாக ஆஜரான வகையில் ரூ.6000/(3000x 2) –ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/2035/2015

**தீர்மானம் எண்.1867 அஙகீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழஙகுவதற்கு 2018–19–ம் ஆண்டுக்கான தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் Schedule of rate இந்நாள் வரையிலும் பெறப்படாத காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கீழ்க்காணும் பொருள்களுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,

| வ.எண் | பொருட்களின் விபரம் | யூனிட் | 15mm விட்டம் | 20mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | G.I Pipe | m | 121.00 | 148.50 |
| 2 | G.I Bend | No | 39.60 | 57.20 |
| 3 | G.I Elbow | No | 28.60 | 38.50 |
| 4 | G.I Coupling | No | 24.20 | 27.50 |
| 5 | G.I reducer | No | 30.80 | 55.00 |
| 6 | G.I Union | No | 71.50 | 85.80 |
| 7 | G.M. Ferrule | No | 398.20 | 597.30 |
| 8 | Brass tap | No | 220.00 | 220 |
| 9 | Water meter | No | 1732.50 | 2024.00 |
| 10 | main coch | No | 226.60 | 280.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Ferrule cap | No | 55.00 | 110.00 |
| 12 | Saddle pice 90 mm x 15mm | No | 139.70 | 220.00 |
| 13 | Stop coch | No | 189.20 | 253.00 |
| 14 | G.I Nipple | No | 38.50 | 42.90 |
| 15 | Pipe Nipple | No | 55.00 | 82.50 |
| 16 | Flow control valve | No | 330.00 | 660.00 |
| 17 | Brass screw down pipe coche | No | 346.50 | 519.20 |
| 18 | wheel valve | No | 276.10 | 377.30 |
| 19 | M.S clamp | No | 11.00 | 22.00 |
| 20 | G.I pipe laying | m | 12.00 | 12.00 |
| 21 | G.I pipe | m | 8.00 | 8.00 |
| 22 | பெருல், சாடில், யூனியன் பொருத்துதல் | No | 15.00 | 15.00 |
| 23 | மீட்டர் பொருத்துதல் | No | 46.00 | 46.00 |
| 24 | மண் தோண்டுதல் | m | 166.60 | 166.60 |
| 25 | மேற்பார்வை கட்டணம் மொத்த வகையில் 15 % குறைந்த பட்ச தொகை | | | |

மேலும் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்திட 2018–19–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | 15mm | 20 mm |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 685.35 | 773.85 |
| 2 | தார் தளம் | 490.60 | 606.10 |
| 3 | மண் தரை | 173.50 | 288.75 |

மேலும் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு, மறு இணைப்பு கட்டணம் 2018–19–ம் ஆண்டிற்கு ரூ.250/– வீதம் வசூல் செய்திடவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட விலை விகிதத்தின் படி 2018–19–ம் ஆண்டிற்கு மதிப்பீடு தயார் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/7063/2011

**தீர்மானம் எண்.1868 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி வட்டி தொகை மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை வழங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.200000/– மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.சி1/694/2018

**தீர்மானம் எண்.1869 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

நகராட்சி பகுதிகளில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற அரசு உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட மனைப்பிரிவுகளை முறைப்படுத்துவது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், சிறப்பு முகாம் நடத்துவதற்கும் பேனர் அடித்த வகையில் ரூ.1790/– நகரமைப்பு ஆய்வாளரால் செலவு செய்யப்பட்டுள்ளதால் இத்தொகையினை தனக்கு வழங்குமாறு கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ.1790/–னை நகரமைப்பு ஆய்வார் திருமதி.R.கீதா அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண்.TPI/1038/2018

**தீர்மானம் எண்.1870 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

நகராட்சிகளில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018–ன் படி மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.அ1/4826/2012

**தீர்மானம் எண்.1871 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று 9 ஆண்டுகள் உரிமம் காலம் முடிவடைந்த கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக பொது மக்களுக்கு தினமலர் நாளிதழில் 05.07.2018–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.26712/–ம் மற்றும் 06.07.2018–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.4452/–ம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/2035/2015

**தீர்மானம் எண்.1872 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள 18 தரைபாகை கடைகளை தற்காலிக கடைகளாக மாற்றப்பட்டு 20.03.2018–ல் பொது ஏலத்தில் மூலம் 01.04.2018 முதல் மாதவாடகைக்கு விடப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.அ1/2035/2015

**தீர்மானம் எண்.1873 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சியில் புதிதாக Layout போடப்பட்ட இடத்தில், நகராட்சி பூங்கா அமைப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள காலியிடத்தில் முள்வேலி, நுழைவு வாயில் (Gate) மற்றும் பெயர்பலகை அமைப்பதற்கு கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing fencing arrangements with name board @ Singankavu Layout site | 1.00 |
| 2 | Providing fencing arrangements with name board @ Boundary Road Layout site | 1.20 |
| 3 | Providing fencing arrangements with name board @ Sasthankarai Layout site | 1.20 |
| 4 | Providing fencing arrangements with name board @ Thiruvalluvar Salai Layout site | 1.00 |
| 5 | Providing fencing arrangements with name board @ K.S.S.S Colony Layout site | 1.00 |
| 6 | Providing fencing arrangements with name board @ Pookuzhi Layout site | 1.00 |
| | **TOTAL** | **6.40** |

மேற்காணும் பணியை மேற்கொள்வதற்காக தயார் செய்த உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,40,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ1/938–1/2018

**தீர்மானம் எண்.1874 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளி சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள பழைய உரக்கிடங்கு மற்றும் உப்பளம் பகுதி உரக்கிடங்கு ஆகியவற்றில் தேங்கியுள்ள குப்பைகளை (legacy waste) Bio – Mining திட்டத்தின் கீழ், அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்காக மேற்படி உரக்கிடங்குகளில் Tachnometric survey (consists of Topographical map and contour level with volume of accumulate legacy waste) மேற்கொள்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| **1.** | M/s. Sri Sai recycle solutions,<br>125 A, Neelakandan kovil street<br>Pasumpon nagar, Madurai - 3 | Rs. 3750/- Per Acre |
| **2.** | M/s. Land point constructions,<br>No.201, Kumar complex<br>Maruthamalai Main road<br>Vadavalli, Coimbatore | Rs.4050/- per Acre |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் M/s.Sri Sai recycle solutions, Madurai நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீர் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ1/825–1/2018

**தீர்மானம் எண்.1875 அஙகீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி 2018–19–ம் ஆண்டிற்கு தேவையான படிவஙகள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணினி பிரிவிற்கு தேவையான பொருட்கள் வாஙக உத்தேச செலவுத் தொகை ரூ.500000/–க்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1347/2015/எச்1

**தீர்மானம் எண்.1876 அஙகீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி கணிணி பிரிவில் பயன்பாட்டில் இருந்த Scanner பழுதடைந்து சரி செய்ய இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து அலுவலக பணிகளில் Scanner– ன் அவசியத்தை கருத்தில் கொண்டு, நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ்,Canon lide 120 model Scanner வாஙகப்பட்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.3850/–ஐ M/s.Act Automation, Nagercoil நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.666/2018/AP

**தீர்மானம் எண்.1877 அஙகீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பணியாளர்களின் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் சந்தா தொகை கீழ் குறிப்பிட்டுள்ளபடி வருடம் வாரியாக செலுத்த வேண்டியுள்ளது.

| வருடம் | தொகை ரூ. |
|---|---|
| 2016–17 | 141246 |
| 2017–18 | 141246 |
| 2018–19 | 136290 |
| மொத்தம் | **418782** |

மேற்படி தொகை ரூ.418782/– புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3501/2012/சி1

**தீர்மானம் எண்.1878 அஙகீகரிக்கப்பட்டது**

ஆணையர்/தனி அலுவலர்,
குளச்சல் நகராட்சி